# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 12 டிசம்பர் 2024 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-

Vol : 10 Issue No :12 December 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்

நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்!

ஏசாயா 9 : 6

## மரித்த தாய் உயிரோடு எழும்பினார்!



இருபது ஆண்டுகளுக்கு முன்பு என் அம்மா உடல் நிலை சரியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள். நாங்கள் பல்வேறு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளித்தும் எந்த வித முன்னேற்றமும் இல்லாமல், ஒருநாள் திடிரென்று மயங்கிய நிலையில் கண்கள் மூடிவிட்டது. அம்மாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்கள் இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். இதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் குடும்பத்தினர் அனைவரும் கதறி அழுதோம்.

இந்த நிலையில் நான் அன்பரின் ஊழியத்தைப் பற்றியும், **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் மூலம் கர்த்தர் வல்லமையாக செயலாற்றுவதையும் அறிந்திருந்த படியால், உடனடியாக அன்பரின் ஊழிய ஜெப மையத்திற்கு தொலைப்பேசி வாயிலாகத் தொடர்புக்கொண்டேன். அப்பொழுது எதிர்முனையில் எனது கண்ணீரின் விண்ணப்பத்தை கேட்டு, ஐயா அவர்களிடம் தொலைப்பேசியைக் கொடுத்தார்கள்.

என் அம்மா இறந்த செய்தியைக் கண்ணீரோடு கூறினேன். அப்பொழுது ஐயா அவர்கள் "கலங்காதே! மகளே கர்த்தர் உன் அம்மாவுக்கு ஜீவனைத் தருகிறார்" என்று கூறி பாரத்துடன் ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! அந்த நொடிப்பொழுதே எனது அம்மா கண்விழித்து பார்த்தார்கள். என் அம்மாவிற்கு மீண்டும் ஜீவனைக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். தற்பொழுது என் அம்மாவிற்கு 74 வயதாகிறது, நல்ல சுகத்துடன் இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, என்னுடைய இரண்டு தம்பிகளுக்கு திருமணமாகாமல் தடையாகவே இருந்தது, அந்த தடைகள் யாவும் நீங்கி தம்பிகளுக்கு திருமணம் நடைபெற்று, நல்ல நிலைமையில் இருக்கின்றார்கள்.

நாங்கள் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை முழுமையாக பின்பற்றி வருகின்றோம். ஒரு தம்பி மிஷனெரி ஆகவும், ஒரு தம்பி போதகராகவும் இருக்கிறார்கள். என் மகள், மருமகனும் கர்த்தருக்கு ஊழியம் செய்கின்றார்கள். எங்களுக்காக ஜெபித்து, கர்த்தருடைய வழியில் எங்கள் குடும்பமே வருவதற்கு ஆதாரமாக இருந்த **Dr.ஆனந்த ஸ்திரா, அம்மா திருமதி.மார்கிரேட் ஸ்திரா** அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம். தேவனுக்கே மகிமை!

**– திருமதி. பூலம்மாள், திருநெல்வேலி.**

dranandastira@mojindia.org



# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 10 ♦ டிசம்பர் 2024 ♦ இதழ் 12

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு பங்காளர்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**... நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.**
**யோவான் 10:10**

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆசரிக்கும் இந்த மாதத்தில் இயேசு கிறிஸ்துவை நாம் ஒரு சின்னமாக, ஒரு மதத் தலைவராக, ஒரு குருவாக பார்க்காமல், இயேசு எதற்காக இந்த உலகத்திற்கு வந்தார் என்பதை நாம் அறிந்து, புரிந்து செயல்பட வேண்டும்.

கிறிஸ்துமஸ் உலககெங்கும் வியாபார மயமாக்கப்படுகிறது. கிறிஸ்துவை பின்பற்றுகிற நாம் அனைவரும் அப்படிப்பட்ட காரியங்களை பின்பற்றாமல் உண்மையாகவே இந்த உலகத்தில் இயேசு நமக்காக பிறந்து, நமக்காக மரித்து, மூன்றாம் நாளில் உயிரோடெழுந்து நித்திய ஜீவனை தந்தருளினார் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறவர்களாய் இருக்க வேண்டும். அதையே மற்றவர்களுக்கு பிரசங்கிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் அன்பை மாத்திரமல்ல, கிறிஸ்து நமக்காக நித்திய ஜீவனையும் தருவார் என்பதை உலகம் புரிந்துக்கொள்ள வேண்டும். அதுவே நமது தலையாய கடமையாக இருக்க வேண்டும். அதற்கேற்ப செயல்படுவோம்.

நவம்பர் மாதம் நடைபெற்ற கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம். டிசம்பர் மாதம் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். இந்த கூட்டங்களில் பங்குபெறுகிற ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே விடுதலையாக்குவார்.

டிசம்பர் மாதம் 25–ம் தேதி காலை அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனை நடைபெறும். டிசம்பர் 31–ம்

**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

தேதி இரவு புத்தாண்டு ஆசீர்வாத ஆராதனை அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெறும். இதிலும் நீங்கள் கலந்துக் கொள்ளுங்கள்.

ஜனவரி மாதம் 4–ம் தேதி திருச்சியில் புத்தாண்டு தீர்க்கதரிசன வாக்குத்தத்தக் கூட்டம் மாலை நடைபெறும். ஒவ்வொரு முறையும் இந்த கூட்டத்தில் பங்கு பெறுகிறவர்கள் அந்த வருடம் முழுவதும் அநேக ஆசீர்வாதங்களை பெற்று வருகிறார்கள் என்பதை அறிவோம். ஆகவே புதிய ஆண்டில் நடைபெறும் இந்த கூட்டத்திற்கு நீங்கள் அனைவரும் குடும்பமாக வந்திருந்து வாக்குத் தத்தங்களை பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கி றேன். தங்கும் வசதி வேண்டுவோர் முன்னதாகவே அன்பரின் ஊழிய அலுவலகத்திற்கு தொடர்புக் கொண்டு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நமது Ministry of Jesus You Tube சேனலில் ஒவ்வொரு மாதமும் நேரலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இதை தவறாமல் பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் share பண்ணுங்கள். டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் வாரத்தில் அநேக புது நிகழ்ச்சிகள் Ministry of Jesus You Tube சேனலில் வெளிவருகிறது. கண்டு மகிழுங்கள்.

உங்களுடைய ஊக்கமான ஜெபத்தினாலும் உற்சாகமான காணிக்கையாலும் ஊழியத்தை தாங்குங்கள். எங்களுக்காகவும், ஊழியத்திற் காகவும், எங்கள் அனைவரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

jane@mojindia.org

## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**லூக்கா 1:37 ; யோவான் 1:14; லூக்கா 2:14; 1யோவான் 1:5**






கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அருமையான தேவ பிள்ளைகளே!

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்! வருடங்கள் பல கடந்தாலும் மகிமையில் சற்றும் மங்காத நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பை இந்த நாட்களில் நாம் சந்தோஷமாய் நினைவு கூர்ந்து கொண்டாடுவோமாக!

நீங்களும் உங்கள் குடும்பத்தினர் யாவரும், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் ஆன்மாவிலும், சரீரத்திலும் சுகமாய் வாழும்படி தேவனிடத்தில் அனுதினமும் ஜெபிக்கின்றோம்.

நம்முடைய கூட்டங்களில் நீங்கள் கலந்துக் கொண்டு எங்களிடம் நேரில் சொன்ன ஜெப விண்ணப்பங்கள், கடிதம், இ.மெயில், வாட்ஸ்அப் மற்றும் தொலைபேசி வாயிலாக தெரிவித்த அனைத்து ஜெப விண்ணப்பங்களுக்காகவும் தேவ சமூகத்தில் தொடர்ந்து ஜெபிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் உங்களுக்காக ஜெபிப்பதில் நாங்கள் தவறுவதே இல்லை. ஏனென்றால் பல்வேறு தேவைகளோடு, கண்ணீரோடு, வியாகுலத்தோடு, நம்பிக்கையோடு இருக்கிற உங்களை கர்த்தர் நிச்சயமாக ஆசீர்வதிப்பார். மத்தேயு 18:19,20-ன்படி நிச்சயமாய் இரக்கமுள்ள தேவன் நம்முடைய ஜெபங்களை கேட்பார். ஆசீர்வாதமான, நிம்மதியான நல்ல பதிலை கர்த்தர் தருவார்.

அன்பரின் ஊழியத்தில் ஏறெடுக்கப்பட்ட ஊக்கமான பிரார்த்தனையின் மூலமாய் கடந்த 40 வருடங்களாக அற்புதர் இயேசு உங்களை ஆறுதல்படுத்தி, உங்கள் கண்ணீரை துடைத்து செய்த அற்புதங்கள் ஏராளம், ஏராளம். அவை கணக்கில் அடங்காதவை! என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது. ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது. நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கும் மேலான வைகள் - சங்கீதம் 40:5 எனவே, இந்த வருடத்தின் கடைசியில் தேவனை நாம் ஸ்தோத்தரித்து, அவர் செய்த நன்மைகளை சாட்சியாக பலரிடம் பகிர்ந்து அவர் நாமத்தை புகழ்வோமாக!

கடந்த 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேவாதி தேவன் என் மூலமாக கூறின அத்தனை தீர்க்கதரிசனமும் துல்லியமாய் நிறைவேறினதை நீங்கள் அறிவீர்கள். அதேபோல 2025-ம் ஆண்டு உங்களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் கர்த்தருடைய சமூகத்திலிருந்து வருகிற தீர்க்க தரிசனங்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு உங்கள் நன்மைக்காக சொல்லப்படும். நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் உங்கள் நண்பர்களும்

ஜனவரி மாதம் 4–ம் தேதி திருச்சியில் நடைபெறும் கூட்டத்தில் பங்குபெறுங்கள். முடிவில் உங்களுக்கு உணவு அளிக்கப்படும்.

அன்பான தேவ பிள்ளைகளே! நமக்கு (நமக்காகவே) ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு (நமக்காகவே) ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார்! ஏசாயா 9:6 இந்த வசனத்தின் ஆழ்ந்த அர்த்தத்தை உற்று நோக்குவோமாக!

## பாவம் என்னும் இருளிலிருந்து விடுதலை

தேவாதி தேவன் நமக்காக மாம்சத்திலே வெளிப்பட்டார். (1 தீமோ.3:16) எல்லாவிதங் களிலும் நம்பிக்கையற்ற நமக்கு நம்பிக்கை யையும், உயர்வையும் தர தமது ஒரே பேறான குமாரனை இந்த உலகிற்கு தந்தருளி தேவன் தமது அளவற்ற அன்பை வெளிப்படுத்தினார். (யோவான் 3:16)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மனுக்குலத்திற்கு ஒப்பிட முடியாத மிகப்பெரிய ஆனந்த மகிழ்ச்சியான செய்தியாகும். கர்த்தருடைய பெரிய தீர்க்கதரிசியாகிய ஏசாயா தன் காலத்திற்கு பிறகு (700 ஆண்டுகள் கழித்து) துன்பத்திலும், துயரத்திலும், பலவித இன்னல்களிலும், போராட் டங்களிலும், தோல்வியிலும், பாவங்களிலும், சாபங்களிலும் நிம்மதியற்று வாழுகின்ற மனுக்குலத்திற்காக மிகுந்த இரக்கமுள்ள தேவன் தமது கிருபையின் ஐசுவரியத்தின்படி கொடுத்துள்ள மாபெரும் பொக்கிஷத்தைக் குறித்து அழகாக கூறியுள்ளார். அந்த விலைமதிக்க முடியாத மகா பிரகாசமான உன்னதங்களில் உள்ள பொக்கிஷம்தான் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு! இயேசு உலகில் வாழும்பொழுது அடிக்கடி தெளிவாக, நான் பரலோகத்திலும் இருக்கிறேன், பரலோகத்தி லிருந்து இறங்கியும் வந்திருக்கின்றேன், நான் உன்னதத்திலிருந்து வந்தவர். மனுக்குலம் எல்லாரிலும் மேலானவராகவும் இருக்கிறேன் (யோவான் 3:31; 8:23; 6:62) என கூறியிருக்கின்றார்.

ஒரு குறிப்பிட்ட ஊரில் இளம் வயதிலேயே திருமணமான 40 வயது நிரம்பிய தம்பதியர் இருந்தனர். குடும்ப தலைவன் ஒரு கடுமையான உழைப்பாளி (விவசாயி) திருமணமாகி 22 ஆண்டுகள் வரைக்கும் குழந்தை பாக்கியமே இல்லாமல் ஏமாற்றத்துடன் வாழ்ந்து கொண்டி ருந்தவர்கள். குழந்தைக்காக பல்வேறு முயற்சி களை மேற்கொண்டபொழுது, மருத்துவர்கள் "அவர்களுக்கு குழந்தையே பிறக்காது, குழந்தை பிறப்பதற்கான அறிகுறியே இல்லை" என கூறிவிட்டார்கள். குழந்தை இல்லாத குறையால் அவர்கள் வாழ்ந்து வந்த ஊரில் எந்த ஒரு நல்ல நிகழ்ச்சிக்கும் போக முடியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் வீட்டின் அருகில்கூட ஜனங்கள் கடந்து போக மாட்டார்கள். அதற்கு பதிலாக சுற்றி தூரத்தில் கடந்து போவார்கள். அந்த வீட்டைப் பார்த்து சாபம் நிறைந்த வீடு எனக் கூறுவார்கள். அந்த இல்லத்தரசி வீட்டைவிட்டு வெளியே வரமாட்டாள். அவர்கள் வாழ்க்கையே இருண்டு போன நிலையில் இருந்தது. ஊர் மக்கள் மலடி என பேசின வார்த்தைகள் அவர்கள் இருதயத்தை பிளந்தது. ஆடம்பரமான எந்த செலவும் செய்ய மாட்டார்கள். நல்ல வஸ்திரம் அணிய மாட்டார்கள். எப்பொழுதும் துக்கம் தான் அந்த வீட்டை நிரப்பியிருந்தது.

அப்படிப்பட்ட நிலையில் ஒரு நாள் அவர்கள் இருந்த இடத்திற்கு நான் போக வேண்டியதாய் இருந்தது. இன்னொரு ஊருக்கு போகும் வழியில் இவர்கள் வசித்த இடம் இருந்தது. நான் அப்படி

போய் கொண்டிருந்தப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என்னோடுகூட பேசினார். "மகனே! உன் காரை நிறுத்து. இங்கு ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டிற்கு நீ செல்ல வேண்டும்" என்றார். தெளிவாக அந்த வீடு எங்கே இருக்கிறது என்பதையும் எனக்குக் காண்பித்தார். நான் அப்படியே காரை விட்டு இறங்கி அந்த வீட்டை நோக்கி இரவு 7 மணி அளவில் சென்றேன். ஊரில் உள்ள மற்ற எல்லா வீடுகளிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது. இந்த வீட்டில் மாத்திரம் ஒரு சிறிய சிட்டி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நான் நெருங்கி வீட்டுக் கதவை தட்டிய பொழுது அவர்கள் என்னை பார்த்து "தயவுசெய்து நீங்கள் வீட்டிற்குள் வர வேண்டாம். எங்கள் வீடு ஒரு சாபம் நிறைந்த வீடு. இந்த ஊரில் உள்ள வர்கள் எங்கள் வீட்டிற்கு வர மாட்டார்கள். எனவே நீங்களும் வந்து எங்களுக்கு இருக்கிற சாபத்தை பெற்றுக்கொள்ளாதீர்கள்" என கூறினார்கள். அவர்கள் கூறினது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏனென்றால், குழந்தை யற்றவர்கள் நமது இந்தியாவில் எப்படி எல்லாம் பழி சொல்லுக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் அறியாதிருந்தேன். அவர்கள் எவ்வளவோ தடை செய்தும் நான் பொருட்படுத்தாமல் கர்த்தருடைய ஆவியானவர் சொன்னபடி உள்ளே சென்றேன். அந்த சிட்டி விளக்கில் அவர்கள் முகத்தை பார்த்தபொழுது சோகம் ததும்பி இருந்தது. அவர்களை பார்த்து "நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா?" என்று கேட்டேன். அவர்கள் சட்டென்று இயேசு என்றால் யார் என்றே எங்களுக்கு தெரியாது என்றார்கள். உடனே இயேசுவை பற்றி கூறினேன். அவர்கள் இருவரும் மிகவும் அழுதார்கள். ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டேன். நான் பேசுகிற கனிவை பார்த்து அவர்கள் உள்ளத்தில் உள்ளதை என்னிடம் கூற ஆரம்பித்தார்கள்.

"ஐயா, எங்கள் இருவருடைய சரீரத்திலும் குழந்தை பெறுவதற்கான எந்த அறிகுறியும் இல்லை, நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி தான் திருமணம் செய்து கொண்டோம். இதுவரை எங்களுக்குள் சண்டையே வந்ததில்லை. எவ்வளவோ பலிகள், நேர்த்தி கடன்கள் செலுத்தி விட்டோம். பயன் இல்லை. ஆகவே "நாளை பொழுது விடிவதற்குள் சாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விஷத்தை வாங்கி வைத்துள் ளோம்" என்று கூறினார்கள். இதைக்கேட்டு என் இதயம் சுக்கு நூறாய் உடைந்தது. என்னையும் அறியாமல் நான் அழுதுவிட்டேன். அவர்கள் இருவரையும் அணைத்துக் கொண்டு, விஷ பாட்டிலை வாங்கி தூக்கி எறிந்துவிட்டேன்.

அவர்களிடம் கண்டிப்பாக அடுத்த கிறிஸ்துமஸ் நன்னாளில் உங்களுக்காகவே உலகிற்கு வந்த இயேசு ஒரு அருமையான ஆண் குழந்தையை உங்களுக்கு பிறக்கச் செய்வார், குழந்தைக்கு இம்மானுவேல் என பெயர் வையுங்கள்" என்று கூறி அவர்களை ஆறுதல் படுத்தினேன். நான் சொன்னதை முதலாவது அவர்களால் நம்ப முடியவில்லை.

என் வருகை அவர்களுக்கு மிகவும் வியப்பாய் இருந்தபடியால் "சரி, நீங்கள் சொன்னதை நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினார்கள். என்ன ஆச்சரியம்! "அடுத்த மாதமே அந்த இல்லத் தரசி கருவுற்றாள். வீட்டிலேயே சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. அவர்கள் இருவருக்கும் மிகுந்த சந்தோஷம். கர்த்தர் நமக்கு ஒரு குமாரனை கொடுத்தார் என்று தேவனை ஸ்தோத்தரித்தார்கள். ஊர் முழுவதும் குழந்தையை தூக்கிக் கொண்டுப் போய் இயேசு கடவுள் எங்களுக்கு ஒரு குழந்தையை கொடுத்தார்" என்று சந்தோஷமாய் கூறினார்கள். அவர்கள் துக்கம் சந்தோஷமாய் மாறியது. அந்த குழந்தை

வளர்ந்தது, முடிவில் அந்த ஊருக்கே மிகப்பெரிய மருத்துவராக உயர்ந்தான்.

ஆம். கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! நாமும் ஒரு காலத்தில் பாவத்தின் விளைவாக அகோரமான மரண இருளில் உழன்று தவித்துக் கொண்டிருந்தோம். ஆனால் எவ்வள வேனும் பாவமற்ற தேவ குமாரனாகிய இயேசு நமக்காக பிறந்தபடியால், நமக்காக கொடுக்கப் பட்டபடியால், பாவங்களும், சாபங்களும் அதற்குரிய தண்டனைகளும் நம்மைவிட்டு நீக்கப்பட்டது. நாம் பாவ சங்கிலியிலிருந்து விடுவிக்கப்பட்டோம். பாவத்தின் சங்கிலிகள் தெறிப்புண்டு போனது.

சாத்தானின் பிள்ளைகள் என்று சொல்லப் பட்ட நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றும், நீதிமான்கள் என்றும் அழைக்கப்பட்டோம். இதற்காகவே தேவ குமாரனாகிய இயேசு பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக உலகிற்கு வந்தார். (யோவான் 1:36; மத்தேயு 1:21; 4:16; ஏசாயா 9:2) மனுக்குலத்தின் அனைத்து பாவங்களையும் தானே சிலுவையில் சுமந்து, பாவத்தின் தண்டனையாகிய தேவ கோபாக்கினையை ஏற்று, சிலுவையில் மரித்து மரணத்தை ஜெயமாய் விழுங்கி வெற்றி சிறந்தார். எத்தனை பெரிய ஆச்சரியம் பாருங்கள்.

இயேசு மாத்திரம் நமக்கு கொடுக்கப்படா விட்டால் நாம் இன்னும் மேற்கூறிய குடும்பத்தின் கதையை போல இருளில் தான் இருப்போம். ஆனால் தேவன் தம்முடைய ஒப்பற்ற கிருபையின், இரக்கங்களின் ஐசுவரியத்தின்படி (எபேசியர் 1:7: 2:4) நம் பாவங்களை எல்லாம் மன்னித்து தம்முடைய இரத்தத்தால் கழுவி தம்மோடு கூட உயர் ஸ்தலங்களில் அவரோடுகூட நடக்கவும் வைத்தார் (எபேசியர் 2:1-8) இது தேவனுடைய ஈவு! நம்முடைய நற்கிரியையின் நிமித்தமாக தான தர்மங்களின் நிமித்தமாக பலவிதமான நேர்த்தி கடன்கள், சந்நியாசங்கள், விரதங்கள் மூலம் நாம் தூய்மையாகவில்லை, தூய்மையாக்கவும் முடியாது. நமக்காக பிறந்த இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே, நமக்காக பாவ பரிகாரமும் செய்து, பாவ இருளிலிருந்து விடுதலையாக்கி நம்மை தூய்மையாக்குகிறது.

## அற்பமாய் எண்ணப்பட்டவர்களுக்கும் உயர்வு

இயேசு கிறிஸ்து உலகில் பிறந்ததின் நிமித்தம் அற்பமாய் எண்ணப்பட்ட ஒவ்வொரு வருக்கும் ஒரு மிகப்பெரிய உயர்வு கிடைத்தது. வானங்களிலும், உலகத்திலும் மிகவும் உயர்ந்தவர் தேவாதி தேவன். இயேசு கிறிஸ்து மூலமாக அவர் நம்மிடத்தில் வாசம் செய்கிறவராக மாறினார். (சகரியா 2:10; வெளி. 21:4; எரேமியா 32: 38)

இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்த மாம் - மத்தேயு 1 : 23 எப்பொழுது எல்லாம் இயேசுவை நாம் நினைக்கிறோமோ அப்பொழுது எல்லாம் சர்வ வல்ல தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம். ஏனென்றால் இயேசுவும் பிதாவும் ஒன்றாக இருக்கிறார்கள். (யோவான் 10:30) பிதாவும், பரிசுத்த ஆவியான வரும் ஒன்றாக இருக்கிறார்கள் (2கொரி. 3:17) எனவே மனங்கலங்காதீர்கள்!

அனைத்து விதமான இக்கட்டுகள், இடர் பாடுகள், வேதனைகள், கஷ்டங்கள், துன்பங்கள் மற்றும் இயலாமைகளில் நாம் சிக்கி தவித்தாலும் அதற்கு எல்லாம் முடிவு உண்டாக்கி நமக்கு ஆசீர்வாதமான வாழ்க்கையை கொடுப்பவர் தான்

இயேசு கிறிஸ்து! நான் அடிக்கடி சொல்லும் வார்த்தை "இயேசுவை நான் அறியாதிருந்தால் என்றைக்கோ என் துயரத்தில் நான் அமிழ்ந்து இறந்து போய் இருப்பேன்" (சங்.27:13) என்பதாகும். கிறிஸ்து இயேசு நம்மோடு இருக்கும் பொழுது நம் துயரங்கள் எல்லாம் சந்தோஷமாய் மாறுகிறது.

ஆம்! என்னுடைய சிறுவயதிலும் இயேசுவை குறித்து எனக்கு சொல்லிக் கொடுத்த அன்பு மிஷனரிகளை நினைத்து நான் அதிக சந்தோஷப்பட்டதுண்டு. ஏனென்றால், நான் பிறந்து சில நாட்களிலேயே காப்பகத்திற்கு கொண்டு வரப் பட்டேன். அங்கு தங்களையே ஆண்டவருடைய அன்பின் பணிக்காக அர்ப்பணித்த மிஷனரிகளும், அக்காமார்களும் பலர் உண்டு. அவர்கள் இயேசுவை பற்றி சிறு பிள்ளைகளுக்கு ஏற்ற வகையில் விளக்கமாக, பிஞ்சு உள்ளத்தில் ஆழமாக பதியும்படி கூறினார்கள். பிறகு கர்த்தருடைய அழைப்பை பெற்று நான் காப்பகத்தை விட்டு வெளியேறி தன்னந்தனியாக விவரம் தெரியாத இடத்திற்கு வந்தபொழுது சில நேரங்களில் திகில் என்னை சூழ்ந்துக்கொண்டது. அப்பொழுது எல்லாம் இயேசு என் அருகில் இருந்து என்னை தேற்றியுள்ளார்.

இன்று எனக்கு 72 வயதாகிறது. இதுவரை நான் சம்பாதித்த காசு பணம் எனக்கு சந்தோஷத்தை கொடுக்கவில்லை. உலகத்தின் எந்த காரியங்களும் இதுவரை என்னை கவர்ந்தது இல்லை. கஷ்டப்பட்டு கர்த்தருடைய கிருபையால் நான் பெற்ற பட்டங்களோ, அந்தஸ்தோ எனக்கு சந்தோஷத்தை தரவில்லை. உலகத்தின் ஆசா பாசங்களும் என்னை கவரவில்லை. குடும்ப வாழ்க்கையிலும் சொல்லப்போனால் அதிக பற்று இல்லாமல் தான் இருந்தேன். இயேசு கிறிஸ்து எனக்கு காட்சியளிக்கும் வரைக்கும் அத்தனை வருடம் கண்ணீர் தான் என் உணவாக இருந்தது. இவை எல்லாவற்றின் மத்தியிலும் எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும், சமாதானத்தையும் தந்த காரியம் என்னோடு இயேசு இருப்பது மட்டுமே. இயேசுவைவிட இந்த உலகில் வேறு பெரிய சந்தோஷம் நமக்கு இல்லை.

இன்பத்திலும், துன்பத்திலும், கொடிய மரண விளிம்பிலும், மரண பள்ளத் தாக்கிலும், தோல்வியிலும், வெற்றியிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் எப்படி வாழ்ந்தாரோ அப்படியே இன்றும் என்னோடு கூட அவருடைய வேதத்தின் வாயிலாக,



பரிசுத்த ஆவியானவராக இருப்பது தான் சந்தோஷம். (யோவான் 14: 21,23)

அன்பு பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து இல்லாத இடத்தில் நான் இருக்க விரும்புவதில்லை. ஆம்! இயேசு பிறந்த பொழுது தூதர்கள் பாட்டு பாடினார்கள். அவர்கள், "பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும், தேவனுக்கு மகிமையும் உண்டாவதாக" என்று சொல்லி அவரை ஆர்ப்பரித்து பாடினார்கள். அதுமாத்திரமல்ல, அவருடைய பிறப்பு "எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" என்றும் கூறினார்கள். இயேசு நம்மோடுகூட வாழும் பொழுது அவர் நமக்கு அதிசயமானவராகவும், ஆலோசனை கர்த்தராகவும், வல்லமையுள்ள தேவனாகவும், நித்திய பிதாவாகவும், சமாதான பிரபுவாகவும் எப்பொழுதும் இருக்கிறார். நம்முடைய சூழ்நிலைக்கு ஏற்ப இந்த 5 செயல்பாடுகளிலும் இடைபட்டு நம்மை விடுவித்து சந்தோஷப்படுத்துகின்றார். (ஏசாயா 9: 6)

உங்களைப் போலவே நானும் என் தனிப்பட்ட வாழ்க்கையிலும், எனது குடும்ப வாழ்க்கையிலும் பலப்பல இக்கட்டுகளை கடந்து வந்துள்ளேன். மரண வியாதிகள், கடன்கள், எதிரிகளின் கோஷங்கள், கொலை மிரட்டல்கள், நம்பிக்கை துரோகங்கள், எதிர்பாராத விபத்துக்கள், வாழ்வில் முன்னேற விடாதபடி மற்றவர்களால் வரும் தடைகள், சோர்வுகள், தனிமைகள் etc., etc., இப்படி எலலாவற்றையும் கடந்து வந்துள்ளேன். இவை எல்லாவற்றிலும் அன்று முன்னணையில் ஏழையின் கோலமாய் பிறந்து நம்மைப் போல எல்லா நெருக்கங்களினாலும் நெருக்கப்பட்டு அடிமையின் ரூபமெடுத்து தரித்திரரான இயேசு ராஜாதி ராஜாவாக வெற்றி சிறந்தவராக எங்களோடு இருந்து மேற்கண்ட எல்லாவற்றையும் வெற்றியோடு கடக்கும்படி செய்தார். எங்கள் கண்ணீர் ஆனந்த கண்ணீராக மாற்றப்பட்டது. (ஏசா. 63:9; 2கொரி.8:9) தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் – பிலி.2:7. அவரை நாங்கள் எப்படி மறக்க முடியும், நன்மையோ, தீமையோ, ஜீவனோ, மரணமோ, கஷ்டங்களோ, பாடுகளோ எதுவும் நம்மை கிறிஸ்து இயேசுவை விட்டு பிரிக்காது. (ரோமர் 8: 36–39)

ஆகவே கிறிஸ்துமஸ் நன்னாளில் உலகப் பிரகாரமாக நாம் அனுபவிக்கும் சந்தோஷங்களை பார்க்கிலும் இயேசுவின் நிமித்தமாக சந்தோஷப் படுங்கள். அவரது பிறப்பை தியானம் செய்யுங்கள். இயேசுவை உலகிற்கு அனுப்பின ஒரே தேவனை ஸ்தோத்தரியுங்கள், துதியுங்கள். கிறிஸ்துமஸ் தினத்தன்று அவரை போற்றிப் பாடுங்கள்.

## இயேசுவின் இரகசிய வருகையை நினைவு கூறுங்கள்

இயேசுவின் பிறப்பு பல ஆண்டுகளுக்கு முன் நடந்தாலும் இன்றைக்கும் அது இப்பொழுது நடந்த ஒரு காரியம் போலவே இருக்கிறது. அவை எல்லாவற்றையும் விட இந்த நூற்றாண்டில் வாழுகிற நமக்கு கிறிஸ்துவின் பிறப்பு அன்னை மரியின் மடியில் தவழ்ந்த குழந்தைக்காகவோ அல்லது சாஸ்திரிகளை நடத்தின விசேஷித்த விடிவெள்ளி நட்சத்திரமாக வோ மாத்திரம் இல்லாமல், துரிதமான அவருடைய இரண்டாம் இரகசிய வருகையை ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் கொண்டாடும் பொழுதெல்லாம் நினைவு கூறுங்கள்.

இயேசு கிறிஸ்து இன்றைக்கோ நாளையோ அல்லது சில காலம் கழித்தோ எப்பொழுது வரப் போகிறார் என்று நமக்குத் தெரியாது. ஆனால், அதி

சீக்கிரமாய் வரப்போகிறார் என்பதை மாத்திரம் நாம் அறிவோம். எனவே, வழக்கமான பண்டிகையாக இந்த கிறிஸ்துமஸ் விழாவை ஆசரிக்காமல் அவருடைய இரண்டாம் வருகைக்கு நம்மையும், நம் குடும்பத்தினரையும், நண்பர்களையும் நாம் ஆயத்தப்படுத்துவோம். குடும்பங்களின் இரட்சிப்பிற் காக அதிக ஊக்கமாய் ஜெபிப்போம். அவர் எப்படி உலகைவிட்டு சென்றாரோ? அப்படியே சீக்கிரமாய் மேகங்களோடு வல்லமையாக எழுந்தருளி மகத்துவமான ராஜனாய் வரப்போகிறார். நாமும் ஆயத்தப்படுவோம்! மதியற்றவர்களை போல இல்லாமல் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வோம். அவர் எப்பொழுது வருவார் என்று தெரியாமல் இருக்கிறபடியால் எப்பொழுதும் அவரை குறித்தே தியானம் பண்ணி நடப்போமாக!

## அவர் (இயேசு) கூறினபடி ஊழியங்களுக்கு, ஏழைகளுக்கு உதவுங்கள்!

இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடும்பொழுது ஏழையின் கோலமாய் பெத்லகேமில் கந்தைதுணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தப்பட்ட தேவ பாலகனை நினைவு கூறுவோம். சாஸ்திரிகளும், மேய்ப்பர்களும் இயேசுவைக் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து, விலையுயர்ந்த காணிக்கைகளை தேவ பாலகனுக்கு இஸ்ரவேலின் ராஜாவிற்கு செலுத் தியது போல நாமும் தேவனுக்கு விலையுயர்ந்த காணிக்கைகளை அவருக்காகவும், அவருடைய ஊழியங்களுக்காகவும் கொடுப்போமாக!

ஒவ்வொருவரும் தங்களுடைய காணிக்கை களை வானத்திற்கு போஸ்டல் செய்ய முடியாது. ஆனால், பூமியில் காணப்படுகிற ஆராதனையின் வழிபாட்டு ஸ்தலங்களுக்கு அதில் நடைபெறும் ஜெபதப ஊழியங்களுக்கு தேவ பிள்ளைகளான போதகர்களுக்கும், ஏழ்மையான பாஸ்டர்களுக்கும் நம்மால் இயன்றதை செய்வோம். அதுவும் அல்லாமல் கிறிஸ்து இயேசு நமக்காக ஏழ்மையின் கோலமாய் வந்தபடியால் அதை நினைத்து எளியவர்களுக்கும், வறியவர்களுக்கும் நம்மால் இயன்ற உதவிகளை செய்வோம்.

இந்த கடுமையான குளிர்காலத்தில் வஸ்திரமின்றி தவிக்கிற சிறு பிள்ளைகளுக்கு, விதவைகள், அனாதைகள், வறியோர்கள், நோயாளிகள், வாழ்வில் நம்பிக்கையற்ற வர்களுக்கு நம்மால் முடிந்த உதவியை செய்வோம். ஒரு வேளை உங்களால் நேரடியாக இந்த தாராளமான அறப்பணிப்பை செய்ய முடியா விட்டால் நமது அன்பரின் ஊழியத்தின் மூலமாக செய்யப்படுகின்ற சுவிசேஷப் பணிக்கு, S J Saves

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

NAMBIKKAI TELEVISION நம்பிக்கை டிவி

வெள்ளி, சனி, ஞாயிறு

8:30PM to 9:00PM

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADHANA TV

வியாழன், வெள்ளி

7:00PM to 7:30PM

Trust மூலம் ஏழைகளுக்கு செய்யும் நற்பணி களுக்கு உங்கள் உதவிகளை அனுப்பி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள். (மத். 25:33-40; நீதி. 19:17; 11:25; 28:27) உற்சாகமாய் கொடுக்கிற ஒவ்வொருவர் மேலும் தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதம் எப்பொழுதும் இருப்பதாக!

ஒரு வேளை சந்தோஷமாக, நல்லவிதமாக இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாட முடியாத நிலையில் நீங்கள் இருப்பீர்கள் என்றால் நிச்சயமாய் நான் உங்களுக்காய் ஜெபிப்பேன். கர்த்தர் தாமே அன்பின் தூதர்கள் மூலமாக அன்புள்ள மக்கள் மூலமாக உங்களை சந்தித்து உங்களுக்கு உதவி செய்து உங்களை ஆறுதல் படுத்துவார்.

நல்ல வஸ்திரமின்றி, நல்ல உணவின்றி, சந்தோஷமில்லாமல், குளிரில் வாடும் மக்கள் மற்றும் ஏழை பிள்ளைகளுக்கு நமது SJ Saves Trust மூலமாக உதவிகள் செய்யப்படுகிறது. இந்த பணிக்கு நாம் உதவி செய்வதன் மூலம் நமக்காக ஏழ்மையின் கோலமாக மாட்டுக் கொட்டகையில் பிறந்த அன்பர் இயேசுவுக்கு நாம் நன்றி செலுத்து வோமாக!

தேவ தூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்த படி இயேசு பாலகனை அவர்கள் கண்டு மகிழ்ச்சி யடைந்தனர். அந்த சந்தோஷத்தின் சுவிசேஷத்தை எங்கும் அறிவித்தனர். அன்பரின் ஊழியம் மூலம் செய்யப்படும் சுவிசேஷ ஊழியங்களை நீங்கள் உற்சாகமாய் தாங்குங்கள். நமது சுவிசேஷ ஊழியம் நாடெங்கும், உலகெங்கும் பரவ அதிக ஊக்கமாய் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் யாவரோடும் இருப்பாராக!

## சென்னையில்

# உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

நாள் : 2025
ஜனவரி 11
சனிக்கிழமை

இடம் : J.J. மஹால்,
L.K.S. தங்க மாளிகை எதிரில்,
G.S.T. மெயின் ரோடு, கடப்பேரி,
மேற்கு தாம்பரம், சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை.

தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா



தொடர்புக்கு : செல் 94888 45627, 80987 42638

## முக்கிய அறிவிப்பு

**ஜனவரி மாதம் 4-ம் தேதி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டம் நடைபெறும்.**

**ஆகவே டிசம்பர் மாதம் மட்டும் திருச்சியில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# We Are Hiring!!

## ACCOUNTANT

(B.Com. / M.Com. Graduates)
Skills Required : Tally ERP 9

**Male / Female || Christians Preferred**

ministryofjesushr@gmail.com





## CAMERA MAN / VIDEO EDITORS
## GRAPHIC DESIGNER

(Any UG/PG Candidates)

Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects

**Male / Female, Christians Preferred**

**Apply to: ministryofjesushr@gmail.com**

# We Are Hiring!!

## PRAYER WARRIORS

Language Known
Tamil-Malayalam
Tamil- Telugu

ministryofjesushr@gmail.com



**Male / Female || Christians Preferred**

# சுவிசேஷத்தை அறிவிப்போம்!
# சுவிசேஷப்பணியை தாங்குவோம்!








அன்பரின் ஊழியத்தின் மூலம் 14 விதமான பணிகளை செய்து வருகிறோம். அவைகளில் சுவிசேஷ கூட்டங்கள் வாயிலாக ஏராளமான ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை கொண்டு வருகிறோம். (மாற்கு16:16-20)

அநேக இடங்களில் நற்செய்தி பெருவிழாக்களை நடத்தி தரித்திருக்கும் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறோம். (சங்.68:11)

மாதந்தோறும் பல இடங்களில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்களை நடத்துகிறோம். கூட்டங்களுக்கு வருகிறவர்களில் ஏராளமான மக்கள் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், நோயிலிருந்தும் இயேசுவின் நாமத்தினால் விடுதலை அடைகிறார்கள். (தானி.12:3) (நீதி. 11:30)

டிசம்பர் மாதம் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த கூட்டங்களை தாங்குவதற்கு முன்வாருங்கள். கூட்டங்களின் வாயிலாக சந்திக்கப்படுகிற ஆத்துமாக்களை கர்த்தர் உங்கள் கணக்கில் எடுத்துக்கொள்வார்.



# பக்கவாத நோயிலிருந்து அற்புத சுகம்!



என் மாமியார் பெயர் செல்வி. அவர்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாகிவிட்டார்கள். அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள், மாமியாரின் மூளைக்கு செல்கின்ற முக்கிய நரம்பு ஒன்று பாதிக்கப்பட்டு இருப்பதால், இவர்களால் இனி பேச முடியாது, நடக்க முடியாது. நடக்க அதிக நாட்கள் ஆகும். சுயநினைவு திரும்புவது மிகுந்த கஷ்டம்" என்று கூறிவிட்டார்கள். இந்நிலையில் செல்வி மஹாலில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் கலந்துகொண்டேன். அந்த கூட்டத்தின் ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு **"இங்கு ஜெபித்துக் கொண்டிருக்கிற ஒருவரின் வீட்டிலே படுத்த படுக்கையாக இருக்கிறவர்களை கர்த்தர் எழுப்புகிறார், அவர்கள் எழும்பி நடப்பார்கள்"** என்று பலத்த சத்தத்தோடு கூறினார்கள். இந்த வார்த்தை எனக்கே சொன்னது போல இருந்தது. பிறகு ஐயாவும் அதை உறுதி செய்தார்கள்.

என் மாமியார் எழும்பி நடப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கும் வந்தது. வீடு திரும்பினேன். மாமியாரின் சரீரத்தில் ஒரு சில மாற்றம் ஏற்பட்டுள்ளதை அறிந்தோம். ஐந்து நாட்களுக்கு பிறகு நாங்கள் மருத்துவ மனைக்கு மாமியாரை அழைத்து சென்றோம். மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு சொன்னது, **"இவர்கள் பரிபூரணமாக குணமாகிவிட்டார்கள், நரம்பு பாதிப்புகள் முழுமையாக சுகமாகிவிட்டது"** எனக் கூறியதை கேட்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம். தற்பொழுது என் மாமியார் நன்றாக நடக்கிறார்கள், பேசுகின்றார்கள். அவர்கள் வேலைகளை அவர்களே செய்து கொள்கின்றார்கள். கர்த்தர் அவர்களை தமது வல்லமையால் சுகமாக்கியதை நாங்கள் முழுமையாக நம்புகின்றோம். தேவனுக்கே மகிமை!

-திரு.ரூபன், திருநெல்வேலி.

## திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் புத்தாண்டு தீர்க்கதரிசன வாக்குத்தத்தக் கூட்டம்

- புதிய ஆண்டில் அன்பரின் ஊழிய பங்காளராகிய உங்கள் ஒவ்வொருவரையும் நாங்கள் நேரில் சந்தித்து புத்தாண்டில் கர்த்தர் தருகிற தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களை சொல்லி ஜெபிக்க இருக்கிறோம்.
- ஜனவரி 4-ம் தேதி புத்தாண்டு தீர்க்கதரிசன வாக்குத்தத்தக் கூட்டம் மதியம் 3 மணிக்கு துவங்கி மாலை 7 மணிக்கு நிறைவடையும்.
- மத்திய பேருந்து நிலையத்திலிருந்து தில்லைநகர் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வருவதற்கு வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாகன வசதி வேண்டுவோர் பின்வரும் இந்த அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.செல்: 94889 32937
- இரவு உணவு அனைவருக்கும் வழங்கப்படும்.

(கூட்டத்தைப்பற்றிய விபரங்கள் பின் அட்டையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)



# Praise Report
# துதி அறிக்கை

## சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலை!



நான் ஓய்வுபெற்ற காவல்துறை பணியாளர். என் மனைவிக்கு நீண்ட நாட்களாக சர்ப்பத்தின் ஆவியினுடைய போராட்டம் இருந்தது. பல வருடங்களுக்கு முன்பு சிவகாசியில் நடைபெற்ற கூட்டத்தில் என் மனைவி கலந்துக் கொண்டாள். கூட்டத்தின் இறுதியில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என் மனைவிக்காக பாரத்துடன் ஜெபம் ஏறெடுத்தார்கள். கர்த்தர் தாமே மனமிரங்கி அந்த நாளில் பொல்லாத சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலையாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் மனைவிக்காக ஜெபித்த சகோதரருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– திரு. ராஜப்பன், ஆவுசரம்பட்டி.

## நுரையீரல் பிரச்சனை நீங்கியது! ஊரல் சரியானது!

என்னுடைய கடைசி மகள் பெயர் ஜாஸ்மின். அவளுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. மகளுடைய பிரசவத்திற்குப் பின் மகளின்



நுரையீரலில் நீர் கட்டி உருவாகி மிகவும் கஷ்டப்பட்டாள். பல வேறு உயர் மருத்துவ மனைகளில் சிகிச்சை எடுத்தும் குணமாகவில்லை. இந்நிலையில் மில்லர் புரத்தில் உள்ள ஒரு ஆலயத்திற்கு Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் செய்தி கொடுக்க வந்ததை கேள்விப்பட்டு மகளை அழைத்து வந்தோம். ஐயா ஜெபித்துவிட்டு "மகளே! கர்த்தர் உன்னை தொடுகிறார் என சொன்னார்கள், அந்த நேரமே கர்த்தர் மகளுக்கு அற்புத சுகத்தை தந்தார். மகள் இன்று வரை நலமுடன் இருக்கிறாள்.

என்னுடைய பேத்தி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு திடீரென்று கை, கால்கள் எல்லாம் ஊரல் ஏற்பட்டு சரீரம் முழுவதும் தடித்து காணப்பட்டது. மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை எடுத்தும் சரியாகவில்லை. இரண்டு வருடமாக இந்த ஊரலினால் பேத்தி கஷ்டப்பட்டாள். இந்நிலையில் செல்வி மஹாலில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு பேத்தியை அழைத்து வந்தேன். நாங்கள் உள்ளே நுழைந்தவுடனே Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனது பேத்தியின் பெயரை சொல்லி அழைத்து, "உனது சரீரத்திலிருக்கிற ஊரல் வியாதி, இயேசுவின் நாமத்தில் சுகமாகிறது"

என்று கூறினார். அந்த நிமிடமே பேத்தி சுகமடைந்தாள். இந்நாள் வரை அந்த பிரச்சனை இல்லாமல் நலமுடன் இருக்கிறாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

– Sis. செல்வராணி, தூத்துக்குடி

## 7 வருட மூட்டுவலி நொடிப் பொழுதில் சுகம்!




சுமார் 11 வருடங்களுக்கு முன்பு நான் மூட்டு வலியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியாது. கேரளா சென்று வைத்தியம் பார்த்தேன். 17 நாட்கள் ஒரே மருத்து வரிடம் தொடர்ந்து சிகிச்சை எடுத்து பல ஆயிரம் ரூபாய் செலவு செய்தும் பயன் இல்லை. வலியினால் மிகவும் துடித்தேன். இந்நிலையில் இனி எந்த மருத்து வரையும் பார்க்கமாட்டேன் என்று முடிவெடுத்தேன். Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் ஏர்வாடிக்கு அருகில் உள்ள தளவாய் புரத்திற்கு வந்திருந்து நற்செய்தி கூட்டத்தை நடத்தினார்கள். அந்த கூட்டத்திற்கு நான் விசுவாசத்துடன் வந்தேன். ஜெப வேளையில் ஐயா அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து, எனது வேதனைகளை சொல்லி ஜெபித்தார்கள், அப்பொழுதே அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன். 7 வருடமாக எந்த சிகிச்சையும் இல்லாமல் மூட்டு வலியின்றி நல்ல சுகத்துடன் பாதுகாத்து வருகிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! – திருமதி. சுசிலா, வள்ளியூர்

## ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம்!



எங்களுக்கு திருமணமாகி ஐந்து ஆண்டு களாக குழந்தை பாக்கியமில்லை. குழந்தை பாக்கியத்திற்காக பலவித சிகிச்சைகள் மேற்கொண்டோம். ஆனால் யாதொரு பயனுமில்லை. இதனால் மிகுந்த மனக்கவலையடைந்தோம்! எங்கள் ஊரிலுள்ள நண்பர் ஒருவர் திருச்சி அன்பரின் ஊழியத்தில் நடைபெறும் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வருவார்கள். அவர்கள் மூலமாக நாங்கள் இக்கூட்டத்தை அறிந்து இங்கு நானும், எனது மனைவியும் கர்த்தர் தான் நமக்கு ஒரே வழி என்று முழு விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் இக்கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்டோம்.

2022–ம் வருடம் அக்டோபர் மாதம் கூட்டத்தில் கலந்துகொண்டு Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் அம்மா திருமதி.மார்கிரேட் ஸ்திரா அவர்களிடமும் எங்களது நிலையை கூறி ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டோம். ஐயா அவர்கள் "கர்த்தர் உங்களுக்கு குழந்தை பாக்கியத்தை அருளுவார் என்றார்கள். அம்மாவும் மூன்று மாதத்தில் நன்மையான காரியங்களை காண்பீர்கள், சோர்ந்து போகாதீர்கள்!" என்றார்கள். கர்த்தர் எங்களை கைவிடவில்லை. 2023–ம் ஆண்டு ஜனவரி மாதம் எனது மனைவி கருவுற்றாள். கர்த்தர் எங்களுக்கு அழகான, அற்புதமாக ஆண் குழந்தை பிறக்க கிருபை

செய்தார். குழந்தையின் முதல் பிறந்தநாளை கொண்டாடி விட்டு ஒரு சில நாட்களில் இந்த சாட்சியை சொல்ல குடும்பமாக இக்கூட்டத்திற்கு வந்துள்ளோம். கர்த்தர் செய்த நன்மையை எங்கள் ஜீவனுள்ள வரை மறக்கமாட்டோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

என்னுடைய தங்கைக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஜெபித்து சென்றோம். அவ்வாறு தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்தது.

என் தம்பியின் குழந்தைக்கு ஆபத்தான நிலையில் திருச்சியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை தரப்பட்டது. தம்பியின் குழந்தையை விசுவாசத்துடன் தூக்கிக்கொண்டு அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்தோம். **Dr.ஜேன் ஜாஷ்வா** அவர்கள் குழந்தைக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்திற்கு பிறகு குழந்தையின் கண் திறந்தது. கர்த்தர் அவனுக்கு அற்புத சுகத்தை கொடுத்தார். எங்கள் குடும்பத்தில் இத்தனை அற்புதங்களை செய்த தேவனை துதிக்கின்றோம்.

**– திரு. ஜெயதேவன் பரிமளா, திருச்சி.**

## தீர்க்கதரிசனத்தின்படி ஆசிரியர் வேலை கிடைத்தது!



2009 ஆகஸ்ட் 15 அன்று திருச்சியில் பங்காளர்களுக்கான தனி ஜெபம் நடைபெற்றது. நான் அந்த ஜெபத்திற்கு வந்திருந்தேன். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக ஜெபிக்கும் பொழுது தீர்க்கதரிசனமாக, "அடுத்த வருடம் இதேநேரம் நீ ஆசிரியராக பணியாற்றுவாய்" என சொன்னார்கள். அந்த வார்த்தையின்படியே ஒரு வருடத்திற்குள் எனக்கு ஆசிரியர் பணி கிடைத்து, தற்பொழுது சாத்தூரில் உள்ள பள்ளியில் ஆசிரியராக வேலை செய்துக் கொண்டிருக்கிறேன். தேவனுக்கே மகிமை!

**– திரு. வின்சென்ட், தூத்துக்குடி.**

## அற்புதமாய் சொஸ்தமானேன்



என் மாமியார் அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிறார்கள். எனக்கு கடந்த சில மாதங்களாக உதிரப்போக்கு அதிகமாக இருந்தது. அதற்காக சிகிச்சை எடுத்தும் நிற்கவில்லை. அதனால் என் சரீரம் மிகவும் பெலவீனமானது. அப்பொழுது என் அத்தையின் அறிவுறுத்தலால் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு என் பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்தை முடித்த அந்த நிமிடமே எனக்கு இருந்த உதிரப்போக்கு நின்றுவிட்டது. அற்புதமாக சொஸ்தமாக்கிய கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன்.

**– Mrs. சத்யா, பட்டுக்கோட்டை.**

Tamil Whats App No.
+ 91 95004 87059

## சிறுநீரக பிரச்சனை நீங்கியது! நன்றாக நடக்கிறேன்!



என் கணவருக்கு சிறுநீரக பிரச்சனை நீண்ட நாட்களாக இருந்தது. திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு வந்து என் கணவருக்காக ஜெபிக்கும்படி Dr.ஆனந்த ஸ்திரா ஐயா, அம்மா இருவரிடமும் கேட்டுக்கொண்டேன். அவர்கள் என் கணவருக்காக ஊக்கமாய் ஜெபித்து அனுப்பினார்கள். தற்பொழுது என் கணவர் பரிபூரண சுகத்துடன் இருக்கிறார்.

எனக்கு தண்டு வடத்தில் இரண்டு முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 3–வது முறையாக அறுவை சிகிச்சைக்கு செல்வதற்கு முன், மருத்துவர்கள் கூறியது, இந்த அறுவை சிகிச்சைக்குப் பின் நீங்கள் நடக்க முடியாது, எந்த வேலையும் செய்யக்கூடாது என சொல்லி அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் அறுவை சிகிச்சைக்கு செல்வதற்குமுன் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு ஜெபித்து விட்டு சென்றேன். அறுவை சிகிச்சைக்குப் பின் தற்பொழுது நன்றாக நடக்கவும், எல்லா வேலைகளும் செய்யவும் கர்த்தர் எனக்கு பெலன் தந்திருக்கிறார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்!

– திருமதி. லூர்து மேரி, பெரம்பலூர்.

## வீடு கட்டினோம்! குடி பழக்கத்திலிருந்து மகன் விடுதலை!



நான் திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு இரண்டு வருடமாக தொடர்ந்து வருகிறேன். கூட்டம் முடிந்து தனி ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா ஐயா அவர்கள் எனக்காக ஜெபித்து விட்டு தீர்க்கதரிசனமாக, நீங்கள் வீடுகட்டுவீர்கள் என சொன்னார்கள். கூட்டம் முடிந்து வீட்டிற்கு போனப்பொழுது, அரசாங்க திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான அனுமதி வந்திருக்கிறது என்பதை என் மருமகள் தெரிவித்தாள். அதன்பின் தேவ கிருபையால் வீடுகட்டி முடித்தோம். வீடு கட்டுவதற்காக வாங்கிய கடனையும் முடித்து விட்டோம்.

என் மகனுக்கு பல வருடங்களாக குடி பழக்கம் இருந்தது. கூட்டத்திற்கு வரும்பொழுதெல்லாம் என் மகனுக்காக ஐயா ஜெபித்து அனுப்பினார்கள். தற்பொழுது அந்த பழக்கத்திலிருந்து மகன் விடுதலையாக கர்த்தர் தாமே உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

– திருமதி. அமலோற்பவம், லால்குடி.

Telugu Whats App No.
+ 91 91770 87860

கிறிஸ்துமஸ்
பண்டிகையை முன்னிட்டு
நமது S.J.SAVES TRUST–ல் உள்ள
ஏழை பிள்ளைகளுக்கு தாராளமாய்
உதவி செய்யுங்கள்.

அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ்செய்யவும் வேண்டுமென்று திட்டம்பண்ணினான். எஸ்தர் 9:22



இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் 500 பிள்ளைகளுக்கு நாம் புத்தாடைகளை வழங்கி, கிறிஸ்துமஸ் அன்பளிப்பு மற்றும் நல்ல விருந்து அளிக்க இருக்கிறோம். உங்கள் குடும்பத்தின் சார்பாக ஒரு பிள்ளைக்கு அல்லது இரண்டு பிள்ளைகளுக்கு புத்தாடைகள் வழங்க முன்வாருங்கள்.

**ஒரு பிள்ளைக்கு ஆகும் செலவு Rs.1,500/-**
**500 பிள்ளைகளுக்கு ஆகும் செலவு Rs.7,50,000/-**

உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த அன்பளிப்பை ஏழை பிள்ளைகளுக்கு கொடுத்து கொண்டாடுங்கள்!

**ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய**

*Bank A/c. Name : S J SAVES TRUST*
*Account No. 019150310875369*
*Bank Name :Tamilnadu Mercantile Bank*
*Branch : Palakarai, Trichy*
*IFSC Code : TMBL 0000019*
*A/c Type : Current*

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய், அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும். லூக்கா 14:13,14**

அக்டோபர் மாதம் சேலம் மாவட்டத்தில் உள்ள வெள்ளாள குண்டம், சேஷன் சாவடி, பிரிவு ரோடு ஆகிய கிராமங்களில் உள்ள மாற்றுதிறனாளிகளுக்கு, வீல் சேர், வாக்கர், வாக்கிங் ஸ்டிக், செவி திறன் கருவி ஆகியவற்றை Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் இலவசமாக வழங்கினார்கள்.

**வீல் சேர், வாக்கர், வாக்கிங் ஸ்டிக், செவி திறன் கருவி பெற்றவர்களின் பெயர்கள்!**

1.செல்லம்மாள் 2.விக்னேஷ்வரி 3.சித்ரா 4.முருகன் 5.மலர் 6.ராஜா 7.சிவகாமி 8.பாலகிருஷ்ணன் 9.கோபால் 10.ராஜம்மாள் 11.தனமணி 12.காந்தாயி 13.மாரியம்மா 14.உண்ணாமலை

**சக்கர நாற்காலிகள் (Wheel Chair) பெற்றவர்களின் சூழ்நிலை:**

26 வயதுடைய முருகன் சிறு வயதிலேயே கை, கால்கள் செயலற்ற நிலையில் தாயாரின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். தாய்க்கு வயதான நிலையில் இவரை பராமரிப்பது கடினமாக இருந்த நிலையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கொடுத்த சக்கர நாற்காலி அதிக உதவியாக இருக்கிறது என முருகனின் தாயார் கண்ணீர் மல்க கூறினார்கள்.





75 வயதுடைய செல்லம்மாள் என்பவரின் கணவர் சமீபத்தில் இறந்துவிட்டார். மாற்றுத்திறனாளியாகிய இவருக்கு தரப்பட்ட Walking stick அதிக பயனுள்ளதாக இருக்கிறது என்றார்கள்.

























# உலக செய்திகள்



அமெரிக்காவின் முன்னாள் அதிபரான டிரம்ப் தேர்தலில் பல தடைகளை தாண்டி வெற்றி பெற்று புதிய சாதனைகளை படைத்துள்ளார். முக்கியமான மாகாணங்களில் டிரம்ப்பிற்கு கிடைத்த ஆதரவே இந்த வெற்றிக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. அமெரிக்க அதிபராக தொடர்ச்சியாக இல்லாமல் இரண்டாவது தலைவர் என்ற பெருமை டிரம்ப்பிற்கு கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர் இந்த சாதனை 132 ஆண்டுகளுக்கு முன்பு படைக்கப்பட்டு இருந்தது. குரோவர் கிளெவ்லாண்ட் என்பவர், அமெரிக்காவின் 22 மற்றும் 24வது அதிபராகபணியாற்றினார். 1885 முதல் 1889–ம் ஆண்டு வரையிலும் அடுத்து 1893 முதல் 1897 வரை அதிபராக இருந்துள்ளார்.

அதே போல் டிரம்ப்பும் 2016 முதல் 2020 வரை அதிபராக இருந்தார். 2020–ம் ஆண்டு நடந்த தேர்தலில் அவர் ஜனநாயக கட்சியின் ஜோ பைடனிடம் தோல்வி அடைந்தார். தற்போது மீண்டும் வெற்றி பெற்று புதிய சாதனையை படைத்துள்ளார். அதேபோல், அதிக வயதுடைய நபர் அதிபராக தேர்வு செய்யப்பட்டவர் என்றால், அதுவும் டிரம்ப் தான். தற்போது அவருக்கு வயது 78. கடந்த 20 ஆண்டுகளில் மக்களின் அதிக ஓட்டுகளை பெற்ற முதல் குடியரசு கட்சி வேட்பாளராகவும் டிரம்ப் திகழ்வதாக கூறப்படுகிறது.

வெற்றி பெற்ற டிரம்ப் அதிபர் பைடனை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் நடந்தது. பைடன் டிரம்புக்கு விருந்து அளித்து கவுரவித்தார். ஓவல் அலுவலகம் வந்த டிரம்ப்பை வரவேற்று பேசிய ஜோ பைடன், அதிகார மாற்றம் சுமூகமாகவும் அமைதியான முறையிலும் நடப்பது உறுதி செய்யப்படும் எனவும், அது குறித்து அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என உறுதியளித்தார். அதற்கு பதிலளித்த டிரம்ப் அது எவ்வளவு சீராக முடியுமோ அவ்வளவு சீராக இருக்கும் என்றார்.

2020–ல் நடந்த அதிபர் தேர்தலில் பைடன் வெற்றி பெற்ற போது, அதனை டிரம்ப் ஏற்கவில்லை. தேர்தல் முறையாக நடைபெறவில்லை என்று டிரம்ப் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது வெள்ளை மாளிகையில் இருந்து டிரம்ப் வெளியேறினார். நான்கு ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக வெள்ளை மாளிகைக்கு டிரம்ப் வந்துள்ளார்.

தொழிலதிபர்கள் எலான் மஸ்க் மற்றும் விவேக் ராமசாமி ஆகியோர் அமெரிக்க அரசின் திறன் துறைக்கு தலைமை வகிப்பார்கள் என அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள டிரம்ப் அறிவித்துள்ளார். இந்த இரண்டு அற்புதமான அமெரிக்கர்களும் எனது அரசில் பணியாற்றுவதற்கும், வீண் செலவை குறைக்கவும் அமெரிக்காவை காப்பாற்றுவதற்கும் தேவைப்படுகிறார்கள். 2026–ம் ஆண்டு ஜூலை 4–ம் தேதிக்குள் அவர்களின் பணி முடிவடையும். சுதந்திர பிரகடனத்தின் 250–வது ஆண்டு விழாவில் திறமையான அரசாங்கம் அமைந்திருப்பது நம் நாட்டிற்கு கிடைத்த பரிசு என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா ஒரு தகுதியான, சமரசமில்லாத தலைவரை அதிபராக பெற்றுள்ளதாக இந்திய வம்சாவழியைச் சேர்ந்த விவேக் ராமசாமி வாழ்த்து தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2024 டிசம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். (லூக்.1:77)

02 தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதற்குச் செவி கொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது. (அப்போஸ்.28:28)

03 ...அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். (பிலி.2:12)

04 கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். (1தெச.4:15)

05 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை. (அப்போஸ். 4:12)

06 மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள். (லூக்கா 3:5)

07 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,... (தீத்து 2:11)

08 இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபி.2:4)

09 தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,... (எபி.5:9)

10 மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். (மத்.24:27)

11 கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. (1தெச.4:15)

12 தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். (1தெச.5:9)

13 நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள். (மத்.24:44)

14 அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். (2பேதுரு.1:16)

15 இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள். (1யோவான் 2:28)

16 ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்.25:34)

17 இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். (2தீமோ.4:8)

18 முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். (மத்.24:13)

19 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:16)

20 ... கர்த்தர் சமீபமாயிருக்கிறார். (பிலி.4:5)

21 மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். (மத்.24:30)

22 மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். (மத்.25:31)

23 நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். (கொலோ.3:4)

24 .... கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். (2தெச.2:2)

25 மனுஷ குமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள். (மத்.25:13)

26 எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். (1பேதுரு 4:7)

27 உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள். (லூக்.21:19)

28 எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். (லூக்.21:20)

29 நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. (யாக்.5:8)

30 ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்.24:14)

31 உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (1தெச.4:15)

# அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்



**ஈரோட்டில்**

டிசம்பர் 7
சனிக்கிழமை

இடம்

**CSI பாரீஸ் ஹால்**
**டெலிபோன் பவன் அருகில்,**
**பிரப் ரோடு, ஈரோடு.**

**வேலூரில்**

டிசம்பர் 14
சனிக்கிழமை

இடம்

**BTM மஹால்**
நெ. 24, 1-வது மேற்கு குறுஞ்சாலை,
காந்திநகர் (மேற்கு), சில்க் மில் பேருந்து நிறுத்தம்,
சட்டக் கல்லூரி சாலை, வேலூர் - 6.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி: **Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**

கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப் படும்.

தொடர்புக்கு : 94888 45627 & 0431 2741925

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

**Bank A/c. Name : SJ SAVES TRUST**
**Account No. 36477148891**
**Bank Name : State Bank of India**
**Branch : Cantonment, Trichy Main Branch**
**IFSC Code : SBIN 0000930**
**A/c Type : Current**

# அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்



“இந்த
QR code-ஐ உங்கள்
செல்போனில் ஸ்கேன் செய்து
அல்லது
95004 87061 என்ற எண்
மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும்
செயலிகள்
மூலமாகவும் காணிக்கை
அனுப்பலாம்.”

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)

Online Donation (Website) || Bank Account / QR Code

UPI / Google pay / Paytm / Phonepe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்

10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 620018.

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், அனல் மூட்டும் தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக
இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.



# எளியவர்களுக்கு இரங்கின கர்த்தர்



என் பெயர் மல்லிகா. எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். இந்த திருச்சி பட்டணத்திற்கு வரும்பொழுது ஒன்றுமில்லாமல் வந்தோம். கையில் துணி மட்டுமே இருந்தது. கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட நாள் முதல் தேவ கிருபையும், மனுஷர் தயவும் எங்களுக்கு கிடைத்தது. அதனால் குடியிருப்பதற்கு ஒரு வீட்டையும், தேவையான பொருட்களையும் கர்த்தர் கொடுத்தார்.

டெலிவரன்ஸ் திருச்சபையின் ஞாயிறு ஆராதனைக்கு தவறாமல் வருகிறோம். **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் கொடுக்கும் தேவ செய்தி, ஜெபம் எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது.

மூத்த மகள் MBA முடித்து திருமணம் ஆகி ஒரு குழந்தை இருக்கிறது. இளைய மகள் B.Com படித்து முடித்து விட்டு வேலை செய்கிறாள். எங்களை சுக, பத்திரமாக பாதுகாத்து உயர்த்தி வைத்திருக்கிற கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக ஜெபிக்கிற பாஸ்டர் குடும்பத்தினருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.

– திருமதி. மல்லிகா, திருச்சி.

joshua@mojindia.org





DELIVERANCE CHURCH PRESENTS

அருள் மாமழை

SHOWERS OF BLESSING

DECEMBER 2024

17, 18, 19, 20, 21

TIME: 7:00 PM

LIVE Streaming On

My Deliverance Church

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month



## கிறிஸ்துமஸ்

பண்டிகை ஆராதனை

அதிகாலை 6:00 மணி

கிறிஸ்துமஸ் சிறப்பு செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா**

டிசம்பர் **25** புதன் கிழமை

டிசம்பர் **31** செவ்வாய் கிழமை

## புது வருட

ஆசீர்வாத ஆராதனை

இரவு 10.30 மணி முதல்

புதுவருட வாக்குத்தத்த செய்தி

**Rev.Dr.A.ஜாஷ்வா**



## டெலிவரன்ஸ் சர்ச்

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி.

**தொடர்புக்கு : செல் – 99421 66066 வாட்ஸ் அப் – 99446 66066**

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு ஆராதனையில் பரிசுத்த திருவிருந்து ஆசரிக்கப்படும்.

## புத்தாண்டு வாக்குத்தத்த மற்றும் தீர்க்கதரிசன கூட்டம்

ஜனவரி **04** சனிக்கிழமை

**2025**

**3:00 PM to 7:00 PM**

புதுவருட வாக்குத்தத்த செய்தி

**Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

மத்திய பேருந்து நிலையத்திலிருந்து அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் வருவதற்கு வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இரவு உணவு அனைவருக்கும் வழங்கப்படும். தொடர்புக்கு செல்: 94889 32937.

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,